ரசாயனப் பொருள்கள் கலந்திருப்பதாலும் கால்வாயில் செல்லும் நீர் சிவப்பு நிறமாக மாறுகின்றது.

(இ) கால்வாய் தண்ணீர் சிகப்பாக மாறுவது தற்காலிகமே தவிர நிரந்தரமான தன்மையில்லாமையால், பரிசோதனைகள் ஏதும் செய்யப் படவில்லை.

சாத்தனூர் அணை

*191. வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுகூர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டை மேலும் அழகுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) சாத்தனூரில் உள்ள பூங்காக்களை மேலும் அழகுபடுத்த ரூபாய் 1.80 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தலைமை அதிகாரிகளின் பரிசிலனையில் உள்ளது.

நீர்த்தேக்கத்தின் நடுவே உள்ள தீவில் புதிய பூங்காக்கள் உண்டாக்க ரூ. 1.50 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு அரசின் பரிசிலனையில் உள்ளது.

Over bridge near Adamankottai

*192 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct over bridges across Railway crossings at Dharmapuri-Adamankottai and Mc.Donald Choultry on Sankari road;

(*b*) if so, the details thereof and the estimated cost of construction;

(*c*) the respective share of the Central Government and the State Government; and

(*d*) when the work is likely to be started and completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) அதியமான் கோட்டைக்கு அருகிலும் மகுடஞ்சாவடியிலும் உள்ள பாலங்களின் மதிப்பீடுகள் முறையே ரூ. 3,53,698, ரூ. 5,17,313-ம் ஆகும்.

(உ) முழுச் செலவும் இரயில்வேயினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(எ) திருத்திய மதிப்பீட்டுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றுக் கொடுக்கும்படி 29—11—1971 அன்று இரயில்வேயினர் மாநில நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இது செயல்பட விருக்கிறது. மகுடஞ்சாவடியின் அருகில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது.